# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 61 / 2021 நாள்: 09.12.2021

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அளித்துள்ள செய்தி வெளியீடு.**

இந்திய தேர்தல் ஆணையம் தயாரித்து வெளியிட்டுள்ள 01.11.2021 அன்று சட்டமன்ற தொகுதிகளுக்கான ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களுக்கான வார்டுவாரியான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல், 2021 தயாரிக்கப்பட்டு, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் வாக்காளர் பதிவு அலுவலரால் வெளியிட மாவட்ட தேர்தல் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டுவாரியான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல்கள் இன்று (9.12.2021) வெளியிடப்பட்டது.

மேற்கண்ட வார்டுவாரியான வாக்காளர் பட்டியல்களை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதளமான "https://tnsec.tn.nic.in"-ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வசதியை பயன்படுத்தி வாக்காளர்கள் தங்களின் பெயர், எந்த வார்டு மற்றும் எந்த வாக்குச்சாவடியில் உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் வாக்காளர்கள் தங்களது வாக்காளர் அடையாள அட்டை எண்ணை உள்ளீடு செய்தும் மேற்படி விவரங்களை அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான வாக்காளர் பட்டியலில் இடம் பெறாத வாக்காளர்கள் முதலில் அவர்கள் தொடர்புடைய சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர்களை சேர்க்க வேண்டும், அதற்கு அவர்கள் தொடர்புடைய சட்டமன்ற தொகுதிக்கான வாக்காளர் பதிவு அலுவலரிடம் சென்று விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

9/12/2021

மக்கள் தொடர்பு அலுவலர்